கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்), விழுப்புரம்.

**O.S. 27/2018**

வா.சா.**1**

**Date:16.12.2022**

பெயர் ஆதிமூலம்

சாட்சி அனுமதி பேரில் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

71 செண்ட் நிலத்தை சிவாநிதி என்பவரிடம் இருந்து வா.சா-ஆ. 8 படி ஒரு சம்மத பத்திரம் வாங்கப்பட்டது. மேற்படி ஆவணத்தில் கண்ட சொத்து ஐயப்பன் மற்றும் பாலமுருகன் ஆகியோரின் தனிப்பட்ட சொத்தா என்றால் இல்லை. அது பொதுக்குடும்ப சொத்து. பிராதில் சொல்லியபடி பாலமுருகன், ஐயப்பன் மற்றும் கோபி ஆகியோரது பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களும் பொதுக்குடும்ப சொத்தா என்றால் பொதுக்குடும்ப சொத்துக்கள்தான்.எனது மூத்த மகன் ஸ்ரீதரன் படித்த பிள்ளை என்பதால் எங்களுடன் அவனை விவசாய வேலை செய்ய நான் அனுமதிக்கவில்லை. படித்த எனது மகன் என்பதால் அவனை விவசாய வேலை செய்ய சொல்லி சிறுமைபடுத்த நான் விரும்பவில்லை. ஐயப்பனும், கோபியும்தான் என்னுடன் விவசாய வேலை செய்தார்கள். கோபி டி எம் இ படித்துள்ளார். அவர் படித்திருந்தாலும்இளைய பையன் என்பதால் குடும்பத்துடன் சேர்ந்து உழைத்தார். என் பெயரில் எனது மனைவி பெயரில் பாலமுருகன், ஐயப்பன், கோபி ஆகியோரது பெயரில் சொத்துக்கள் வாங்கினேன். எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் நான் வாங்கிய சொத்துக்கள் எனது தனிப்பட்ட சொத்துக்கள். எனது மனைவி பெயரில் 3 ஏக்கர் 11 செண்டும், எனது பெயரில் 6 ஏக்கர் 22 செண்டும் வாங்கியுள்ளேன். எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும், பாலமுருகன், ஐயப்பன், கோபி பெயரிலும் வாங்கிய சொத்துக்கள் மொத்தம் 21 ஏக்கர் ஆகும். விவசாயத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டு எனது 3 மகன்கள் பெயரில்தான் வாங்கினேன். எனது மனைவியின் 100 பவுன் நகையை விற்று எனது வருமானத்தையும் சேர்த்து எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் சொத்து வாங்கினேன். 2002 ல் டோசர் என்ற வண்டியை ஐயப்பன் ஓட்டி வந்தான். ஒரு டோசர், ஒரு ரொட்டேட்டார், ஒரு டிஷ்க், ஒரு கல்டிவேட்டர் ஆகியன ஐயப்பனை வைத்து ஓட்ட வைத்தேன். ஏனென்றால் ஐயப்பன் படிக்கவில்லை. மேலும் அவனுக்கு இரும்பு ராசி. பைபாஸ் ரோடு போடும் பணியில் எங்களது வண்டி பயன்படுத்தப்பட்டது. ஒரு வருடம் அந்த வேலைகள் நடந்தது. டோசர் மூலம் ரூ. 25 லட்சம் ஐயப்பன் வருமானம் ஈட்டினார் என்றால் சரியல்ல. வண்டி வாங்கிய கடன் 3.25 லட்சத்தை கட்டி முடித்தான். என்னிடம் பணம் எதுவும் தரவில்லை. அவன்

சம்பாதித்த பணம் அவன்தான் வைத்துக்கொண்டான். பாலமுருகன், ஐயப்பன் கோபி ஆகியோர் சேர்ந்து பெறப்பட்ட கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஐயப்பன், பாலமுருகன் பெயரில் ஏற்பட்ட சொத்துக்களை பொருத்து கோபி ஒரு விடுதலை உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் எனக்கு நினைவில்லை. (பிற்பாடு தனக்கு தெரியாது என்று சாட்சி சொல்கிறார். ) நான் எனது 2 பெண் குழந்தைகள் நளினி, கற்பகம் ஆகியோர்களுக்கு உயில் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். 28 செண்டில் ஆளுக்கு பாதியும், 55 செண்டில் ஆளுக்கு பாதியும் என உயில் எழுதி வைத்துள்ளேன். உயில் எழுதப்பட்ட காலத்தில் ஐயப்பனும்,பாலமுருகனும் என்னுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். உயிலில் கண்ட சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 02.12.2002 ல் நளினி திருமண செலவிற்காக விஜயா, விமலா ஆகியோருக்கு 1 ஏக்கர் 40 செண்ட் சொத்து கிரையம் கொடுத்தேன். அந்த கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுகிறது. அது பி.வா.சா-ஆ. 1. 12.06.2013 தேதியிட்ட நளினி, கற்பகம் பெயருக்கு எழுதிவைத்த உயிலில் எனக்கு பூர்வீக பாத்தியமானதும், திருவாமத்தூர் கிராமத்தில் பட்டா 527 ஆக எனது அண்ணார் வீரப்பன் பெயரில் கிடைத்து அதில் எனக்கு 1/3 பாகம் கிடைக்கப்பெற்றுதுமான தென்னமாதேவி கிராம சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் எனது மகள்களிடம் கொடுத்துவிட்டேன். கோபி பெயரில் எத்தனை செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் எனக்கு நினைவில்லை. மறந்துவிட்டது. நான் மட்டும் எழுதினேனா அல்லது எனது மனைவியுடன் சேர்ந்து எழுதினேனா என்றால் நான் எழுதியுள்ளேன். மொத்தம் எவ்வளவு ஏக்கர் சொத்து கோபி பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தேன் என்றால் 4 ஏக்கர் எழுதி வைத்தேன். மேற்படி 4 ஏக்கர் சொத்தில் 3 ஏக்கர் 11 செண்ட் நிலத்தை கோபி அவரது சகோதரி கற்பகம் பெயருக்கு எழுதி கொடுத்து கற்பகமும், நளினியும் பிரித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். நான் சொல்லியதன் பெயரில் கோபி அவ்வாறு எழுதிக்கொடுத்தார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் மற்றொரு சாட்சி அமரேஸ் ஆவார். வா.சா.ஆ. 5 ஆவணம்தான் நான் குறிப்பிட்ட கோபி எழுதிக்கொடுத்த மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா-ஆ. 4 ஆவணம், நானும், எனது மனைவியும் கோபிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்த 29.07.2013 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சோழகனூர், தென்னமாதேவி, திருவாமத்தூர், ஐயன்கோவில்பட்டு ஆக 4 கிராமங்களில் உள்ள 8 ஏக்கர் 56 செண்ட் கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு நினைவில்லை. சொத்து மதிப்பு 37,74868/- என சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வளவு போகாது. சொத்து மதிப்பு எனக்கு தெரியாது.

ஆவண எண். 3049/2013 ன்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தோம் என்றால் சரிதான். ரத்து ஆவணம் நான் மட்டும் எழுதினேன் என்றும், எனது மனைவி எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரம் வ.சா.ஆ. 10 என்றால் சரிதான். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டதால் நான் ரத்து செய்தேன். எனக்கு ஐயப்பனையும், கோபியையும் எனக்கு ரொம்ப பிடிக்கும் என்றால் சரிதான். ஏனென்றால் அவர்கள் இருவரும் என்னுடன் சேர்ந்து கடுமையாக உழைப்பார்கள். திருவாமத்தூர் எல்லையில் எங்களது பூர்வீக வீடு அருகில் கோபி மினரல் வாட்டர் பிளான்ட் அமைத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் செட்டில்மெண்ட் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த பிளான்ட் பொதுவில் கட்டப்பட்டதா என்றால் இல்லை. கோபி அவரது தனிப்பட்ட வருமானத்தில் அமைத்தார். அவர் திருமணம் மண்டபம், வீடு ஆகியன கட்டுவதற்கு கட்டிட ஒப்பந்த பணிகள் எடுத்து வேலை செய்து சம்பாதித்தார். வங்கியில் கடன் பெற்றும் வாட்டர் பிளான்ட் அமைத்தார். எவ்வளவு கடன் பெற்றார் என்றால் 75 லட்சம் கடன் வாங்கியதாக சொன்னார். மொத்தம் 1 கோடி ரூபாய் செலவானதாக சொன்னார். பிளான்ட் அமைக்க மண் அடித்தது யார் என்றால் கோபிதான் அடித்தார். பொதுக்குடும்பத்தில் இருந்து பிளான்ட் அமைக்க 1 ரூபாய் கூட கொடுக்கவில்லை. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் கோபி பிளான்ட் கட்டியதால் ஏற்பட்டதா என்றால் இல்லை. கோபி திருமணம் ஆகாமல் இருந்தார். பாகம் பிரித்து விட்டு அதன் பிறகு கோபி பிளான்ட் கட்டட்டும் என்று நான் சொன்னேன். கோபி சாமியராக போய்விடுவார் என்றும் அதனால் பாகம் பிரிக்காமலேயே கோபி பிளான்டை விட்டுவிட்டு சென்றுவிடுவார் என்று எனது இதர மகன்கள் கருதி பாகம் பிரிக்க கோராமல் பேசாமல் இருந்தார்கள். பிளான்ட் கரண்ட் சர்வீஸ் வாங்குவதற்கு கூட எனது மற்ற மகன்கள் கையொப்பம் போட்டு கொடுத்தார்கள். கோபிக்கு திருமணம் நிச்சயம் ஆனதால் மற்ற மகன்கள் பிளான்டை பொருத்து விடுதலை ஆவணம் எழுதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகுதான் எனக்கும் ஐயப்பனுக்கும், பாலமுருகனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகுதான் கோபி அவரது மனைவியின் ஊர் திருத்துறையூருக்கு சென்றுவிட்டார். ஐயப்பனும், பாலமுருகனும் அடித்து துரத்தியதால்தான் கோவி அவரது மனைவி ஊருக்கு போனார். 2016 ல் இது நடந்தது என நினைக்கிறேன். திருத்துறையூர் கோபி போவதற்கு முன்புதான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தேன். 22.10.2017 ல் பாலமுருகனும், ஐயப்பனும் என்னை வீட்டை பூட்டி வெளியே அனுப்பிவிட்டார்கள். வீட்டை பூட்டி சாவியை எடுத்து கொண்டார்கள். வாட்டார் பிளான்ட் அமைக்க 24 செண்ட் கோபி பெயருக்கு தான செட்டில்மெண்ட் நான் எழுதி வைத்ததால் ஐயப்பனும், பாலமுருகனும் என்னை வீட்டை விட்டு அனுப்பினார்கள். வா.சா-ஆ. 4 தான செட்டில்மெண்ட் ஆவணத்திலேயே மேற்படி 24 செண்ட் சொல்லப்பட்டிருந்ததா என்றால் இல்லை. 24 செண்ட் வழக்கில் சொல்லப்பட்டுள்ளதா என்று

எனக்கு தெரியாது. 24 செண்ட் பற்றி பிராதில் சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் யார் பெயரில் உள்ளது எனறால் கோபி, பாலமுருகன், ஐயப்பன் மற்றும் எனது பெயரிலும் உள்ளது. பாகம் பிரித்தபின் பிளான்ட் போட சொன்னதன் காரணம் என்ன என்றால் பாகம் பிரித்து பிளான்ட் போடு என்று நான் சொல்லவில்லை. கோபி அவரது சகோதரர்களிடம் சம்மதம் பெற்று பிளான்ட் அமைத்தார்.